தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

ஆணை எண் 103/ந/2022
நாள். 27.12.2022

திரு.வே. கணபதி பாலசுப்பிரமணியன்,
கடையநல்லூர். – முறையீட்டு மனுதாரர்.

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி. – எதிர் மனுதாரர்.

தென்காசி மாவட்டம், கடையநல்லூர், மேலக்கடையநல்லூர், பவுண்டு கீழத்தெரு, கதவு எண்.3/9 என்ற முகவரியில் வசிக்கும் திரு.வே. கணபதி பாலசுப்பிரமணியன் என்பவரின் 04.07.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.07.2022 அன்று பெறப்பட்டு 103/ந/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தென்காசி மாவட்டம், கடையநல்லூர், மேலக்கடையநல்லூர், பவுண்டு கீழத்தெரு, கதவு எண்.3/9 என்ற முகவரியில் வசிக்கும் திரு.வே. கணபதி பாலசுப்பிரமணியன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:–

"தமிழக அரசு, அனைத்து துறைகளிலும் கொள்முதல், கட்டுமானம் மற்றும் இதர சேவைகளில் ஒளிவு மறைவற்ற, வெளிப்படை தன்மையை ஏற்படுத்தும் வகையில் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இச்சட்டத்தின்படி அரசு துறைகளிலும் பணிகள் மேற்கொள்வதோ, கொள்முதல் செய்வதோ டெண்டர் மூலம் தான் மேற்கொள்ள வேண்டும். ஆனால் கடையநல்லூர் நகராட்சியில் அவசர அவசியம் என்ற வகையில் டெண்டர் விடாமலேயே வேண்டியவர்களுக்கு பணிகளை ஒதுக்கி அதிகாரிகளும், ஒப்பந்தக்காரர்களும் பல இலட்சம் ரூபாய் மோசடி செய்துள்ளனர். நகராட்சியை பொறுத்த வரை டெண்டர் ஒளிவு மறைவற்ற முறையில் தான் விட வேண்டும் என்று அனைத்து நகராட்சிகளுக்கும் அவ்வப்போது உத்தரவு பிறப்பித்த போதும் கடையநல்லூர் நகராட்சியை பொறுத்தவரை அனைத்து உத்தரவுகளும் காற்றில் பறக்கவிடப்பட்டு அப்பட்டமாக விதிமுறைகள் மீறப்பட்டுள்ளது. இதுகுறித்து டெண்டர் விடாமல் தங்களுக்கு வேண்டிய ஒப்பந்தக்காரர்கள் மூலம் பணிகள் மேற்கொண்டதை தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம், தான் பெற்ற தகவல்களை இத்துடன் இணைத்துள்ளார். பணிகளை சரிவர

மேற்கொள்ளாமலும், மிகைப்படுத்தி மதிப்பீடு தயார் செய்தும், பல நேரங்களில் பணிகளே செய்யாமலும், நகராட்சி அதிகாரிகளும், ஒப்பந்தகாரர்களும் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளனர். எனவே, மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் இதுகுறித்து விரிவான விசாரணைக்கு உத்தரவிட்டு முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

(2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 26.07.2022 நாளிட்ட கடிதம் மூலம் கடையநல்லூர் நகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் தனது 13.10.2022 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"கடையநல்லூர் நகராட்சியில் 2017–2018 ஆம் நிதியாண்டில் 7 எண்ணிக்கையிலான பணிகளும், 2018–2019 ஆம் நிதியாண்டில் 3 எண்ணிக்கையிலான பணிகளும், 2019–2020 ஆம் நிதியாண்டில் 3 எண்ணிக்கையிலான பணிகளும், 2020–2021 ஆம் நிதியாண்டில் 20 எண்ணிக்கையிலான பணிகளும், 2021–2022 ஆம் நிதியாண்டில் 18 பணிகளும் கீழ்காணும் அட்டவணை விபரப்படி செய்து முடிக்கப்பட்டுள்ளது.

<u>கடையநல்லூர் நகராட்சி</u>

| 05.01.2018 முதல் 26.11.2021 வரை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகள் விபரம் | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | பணியின் பெயர் | பணியின் ஒப்புதல் நாள் | ஒப்பந்தக்காரர் பெயர் | தொகை (ரூபாய்) | ஆவசரமாக பணி மேற்கொள்ளப்பட்டதற்கான காரணங்கள் |
| 01. | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.13, அல்லிமூப்பன் கிழக்கு தெரு மற்றும் காயிதேமில்லத் தெருக்களில் சீரான குடிநீர் விநியோகம் செய்ய புதிய குடிநீர் குழாய் மற்றும் வால்வு அமைத்தல் பணி | 05.01.2018 | திருமதி.எம்.செல்வி | 1,98,000 | குடிநீர் விநியோக பகிர்மான சீரமைப்பு அவசரம் கருதி மேற்கொள்ளப்பட்டது |
| 02. | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.1 , பாரதியார் தெரு மற்றும் முத்துகிருஷ்ணாபுரம் பகுதிகளில் சீரான குடிநீர் விநியோகம் செய்ய புதிய குடிநீர் குழாய் மற்றும் வால்வு அமைத்தல் | 05.01.2018 | திருமதி.எம்.செல்வி | 1,50,000 | குடிநீர் விநியோக பகிர்மான உடன் சரி செய்திட வேண்டிய அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்டது. |
| 03. | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.32, | 05.01.2018 | திருமதி.எம்.செல்வி | 1,60,000 | சீரான குடிநீர் வழங்கிட வேண்டிய அவசரம் கருதி |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ரகுமானியாபுரம் 4ம் தெரு, முத்துகிருஷ்ணாபுரம் பகுதி மற்றும் வார்டு எண்.42, கட்டிவினாயகர் கோவில் தெரு ஆகிய பகுதிகளில் சீரான குடிநீர் விநியோகம் செய்ய புதிய குடிநீர் குழாய் மற்றும் வால்வு அமைத்தல் | | | | மேற்கொள்ளுதல் |
| 04. | கடையநல்லூர் நகராட்சி TN72x8285 வாகனத்திற்கு புதிய ரேடியேட்டர் பழுதுநீக்கும் பணி | 09.01.2018 | மூஸா இஞ்சினியரிங் ஒர்க்ஸ் 194, செங்கோட்டை ரோடு, தென்காசி | 5,425 | குடிநீர் வாகனப் பயன்பாட்டின் அவசியம் கருதி மேற்கொள்ளப்பட்டது. |
| 05 | கடையநல்லூர் நகராட்சி முதல் தளத்திலுள்ள மின் தடையில்லா சாதனம் அவை சார்ந்த பேட்டரிகளை பழுது நீக்கம் செய்யவும் மற்றும் செயல்திறன் இழந்த பேட்டரிகளை புதியதாக மாற்றம் செய்யும் பணி | 19.01.2018 | திரு.பாலசுப்பிரமணியன் (பவர் ஏஜெண்ட்) | 60,000 | அலுவலகப்பணியின் அத்தியாவசியம் கருதி மேற்கொள்ளப்பட்டது. |
| 06 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.05, பேச்சியம்மன் கோவில் தென்வடல் தெரு மற்றும் கிருஷ்ணன் கோவில் தெரு பகுதியில் சீரான குடிநீர் விநியோகம் செய்யும் குழாய்களில் ஏற்பட்டுள்ள அடைப்பை சரிசெய்யும் பணி | 22.01.2018 | திரு.பாலசுப்பிரமணியன் (பவர் ஏஜெண்ட்) | 1,90,000 | குடிநீர் விநியோக சீரமைப்பு பணி உடனடியாக செய்து முடித்திட உடனடியாக மேற்கொள்ளப்பட்டது. |
| 07 | கடையநல்லூர் நகராட்சி பகுதிகளில் குடிநீர் வால்வு கசிவுகள், பைப்லைன் கசிவுகள் மற்றும் வால்வு ஸ்பிண்டில் ராடு சரிசெய்யும் பணி | 19.01.2018 | திரு.ராமசாமி | 1,25,000 | குடிநீர் விநியோக பகிர்மானத்தில் இருந்து குறைகள் உடனடியாக சரி செய்யப்பட்டது. |
| 08 | கடையநல்லூர் நகராட்சி தலைமை | 27.03.2019 | ஆறுமுக இஞ்சினியரிங் | 7,276 | குடிநீர் விநியோக நீரேற்றம் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நகராட்சி தலைமை பணியிடத்தில் புதியதாக 125KVA GENSET டினை முதல் பரிசோதனை செய்யும் பொருட்டு Engine oil 20 ltr Diesel filter, Oil filter ஆகியவற்றை புதியதாக மாற்றுதல் பணி | | இஞ்சினியரிங் ஒர்க்ஸ் 174/4 மதுரை ரோடு, சிங்காரதோப்பு ரோடு, தென்காசி | | நீரேற்றம் பாதிப்படையாமல் இருக்க உடனடியாக மேற்கொள்ளப்பட்டது. |
| 09 | கடையநல்லூர் நகராட்சி கல்லாற்றுப்படுகை, பெரியநாயகம் கோவில் மற்றும் இரண்டாத்து முக்கு திறந்தவெளி கிணற்றிற்கு மின்மோட்டார் விநியோகம் செய்த வகைக்கு (5.00 எச்.பி) | 27.03.2019 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 7,75,000 | கோடை வறட்சியினை சமாளித்திட தலைமை நீரேற்று நிலையத்தில் இயங்கி வந்த மின் மோட்டார்களின் குதிரைத்திறனை அதிகப்படுத்திட புதிய மோட்டார்கள் வாங்கி பொருத்தப்பட்டது. |
| 10 | கடையநல்லூர் நகராட்சி கல்லாற்றுப்படுகை, பெரியநாயகம் கோவில் மற்றும் இரண்டாத்து முக்கு திறந்தவெளி கிணற்றிற்கு மின்மோட்டார் விநியோகம் செய்த வகைக்கு (7.00 எச்.பி) | 27.03.2019 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 8,75,000 | கோடை வறட்சியினை சமாளித்திட தலைமை நீரேற்று நிலையத்தில் இயங்கி வந்த மின் மோட்டார்களின் குதிரைத்திறனை அதிகப்படுத்திட புதிய மோட்டார்கள் வாங்கி பொருத்தப்பட்டது. |
| 11 | 18.04.2019 அன்று பாராளுமன்ற தேர்தல்பணி நடைபெறுவதை முன்னிட்டு மாதிரிவாக்கு மையம் மற்றும் நகராட்சிக்குட்பட்ட 74 வாக்கு சாவடிகளில் தண்ணீர் வசதி, அடிப்படை வசதி மேற்கொள்ளும் பணி | 13.04.2019 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 1,03,712 | தேர்தல் பணியின் அவசரம் கருதி மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரைக்கிணங்க பணி மேற்கொள்ளப்பட்டது. |
| 12 | 18.04.2019 அன்று | 02.04.2019 | திரு.முப்பிடாதி | 68,320 | தேர்தல் பணியின் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | பாராளுமன்ற தேர்தல்பணி நடைபெறுவதை முன்னிட்டு ஊனமுற்றோர் வாக்களிக்க ஏதுவாக 10 வாக்கு சாவடி மையங்களில் சாய்வுதளம் வசதி ஏற்படுத்தும் பணி | | | | அவசரம் கருதி மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரைக்கிணங்க பணி மேற்கொள்ளப்பட்டது |
| 13 | கடையநல்லூர் நகராட்சி கோவிட் –19 தொற்றுநோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை நடவடிக்கைக்கு புதியதாக 5.50 எச்.பி டீசல் மோட்டார் வாங்கி விநியோகம் செய்தல் பணி | 27.03.2020 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 39,000 | கோவிட்–19, அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது |
| 14 | கடையநல்லூர் நகராட்சி கோவிட் –19 தொற்றுநோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கொரோனா வைரஸ் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய விளம்பர பலகைகள், கொரோனா வெளிநாடு மற்றும் வெளிமாநிலத்திலிருந்து வந்தவர்களை வீட்டில் தனிமைப்படுத்துதல் தொடர்பான ஏ4 அளவு கொண்ட கலர் துண்டு பிரசுரங்கள் பணி | 09.04.2020 | திரு.ராஜேந்திர–பிரசாத் | 95,500 | கோவிட்–19, அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது |
| 15 | கடையநல்லூர் நகராட்சி கோவிட் –19 தொற்றுநோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு முன்னெச்சரிக்கை | 29.04.2020 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 97,300 | கோவிட்–19, அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | நடவடிக்கைக்கு புதியதாக 5.50 எச்.பி டீசல் மோட்டார் ஸ்பிரேயல் 2 எண்ணம் மற்றும் புதியதாக பி.வி.சி டேங்க் 2 எண்ணம் வாங்கி விநியோகம் செய்யும் பணி | | | | |
| 16 | கடையநல்லூர் நகராட்சி அம்மா உணவகத்தில் பார்சல் மூலம் உணவு வழங்க அலுமினியம் பூசிய பாக்ஸ், சாம்பார் கவர், புதிய பாக்ஸ் ரப்பர் பேண்ட் 10000 எண்ணம் வாங்கி விநியோகம் செய்த வகைக்கு | 26.04.2020 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 48,000 | கோவிட்–19, அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது |
| 17 | இந்நகராட்சி தாமிரபரணி தரைமட்ட நீர்தேக்க தொட்டி, தலைமை பணியிட தரைமட்ட நீர்தேக்கதொட்டி, பாராளுமன்ற உறுப்பினர் பிரிவு நீர்தேக்க தொட்டி மற்றும் தலைமை நீரேற்றும் நீர்தேக்கதொட்டி ஆகியவற்றில் இயங்கி வரும் மின்மோட்டார்களுக்கு பொருத்தியுள்ள ஸ்டார்ட்டர் 8 எண்ணம் பழுதுநீக்கும் பணி | 27.04.2020 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 95,000 | கோவிட்–19, அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது |
| 18 | இந்நகராட்சி கோவிட் –19 தொற்றுநோய் பரவாமல் தடுக்கும் பொருட்டு 5.5 எச்.பி டீசல் மோட்டார் ஸ்பிரேயல் மற்றும் புதியதாக 1000லி வாட்டர் டேங்க் 2 எண்ணம் வாங்கி விநியோகம் செய்யும் பணி | 08.05.2020 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 97,300 | கோவிட்–19, அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 19 | இந்நகராட்சி பகுதிகளில் ஊரடங்கு சிறிதளவு தளர்க்கப்பட்டதன் காரணமாக வெளிநாடு மற்றும் வெளிமாநிலத்தில் இருந்து வீட்டில் தனிமைப்படுத்துதல் தொடர்பான ஏ4 அளவு கொண்ட கலர் துண்டு பிரசுரங்கள் 1000 எண்ணம் மற்றும் கபசுர குடிநீர் தொடர்பான விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய விளம்பர பலகைகள் 5 எண்ணம் அச்சடித்து விநியோகம் செய்தவகைக்கு | 08.05.2020 | திரு.ராஜேந்திரபிரசாத் | 25,000 | கோவிட்–19, அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது |
| 20 | இந்நகராட்சி கொரோனா தடுப்பு முன்னெச்சரிக்கை பணிகள் மேற்கொள்ள நகராட்சி பகுதிகளில் கிருமி நாசினி தெளிக்கும் இயந்திரங்கள் கை ஸ்பிரேயர் 5 எண்ணம் மற்றும் பேட்டரி மௌண்டட் 5 எண்ணம் வாங்கியவகைக்கு | 14.07.2020 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 89,975 | கோவிட்–19, அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது |
| 21 | இந்நகராட்சி குடிநீர் பராமரிப்பு பணிகளின் கீழ் நகரில் 13 குடிநீர் மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மற்றும் நகருக்கு மேற்கே தலைமை பணியிடம் கல்லாறு, பெரியநாயகம் கோவில் இரண்டாத்து முக்கு ஆகிய பம்பிங் நிலையங்களுக்கு தேவையான தளவாட சாமான்கள் வாங்கி விநியோகம் செய்தவகைக்கு | 23.07.2020 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 1,67,000 | கோவிட்–19, அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 22 | இந்நகராட்சி முதல் தளத்திலுள்ள பொறியாளர் பிரிவிலுள்ள கணினிகளுக்கு மின்சாரம் விநியோகம் மின்தடையில்லா சாதனம், (UPS) இணைக்கப்பட்டு மின்கலம் 10 எண்ணம் பழுதடையந்துள்ளதால் அதனை சரிசெய்யவும் மற்றும் மின்தடை சாதனம் UPS பழுதுநீக்கம் செய்யும் பணி | 03.08.2020 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 1,22,000 | அலுவலகப் பணியின் அத்தியாவசியம் கருதி மேற்கொள்ளப்பட்டது. |
| 23 | இந்நகராட்சி கல்லாற்றுப்படுகையில் உள்ள கிணற்றிற்கு புதிய மின் இணைப்பு பணிகள் மற்றும் கிணற்றில் பழுதான மோட்டார்களை பழுது நீக்கும் பணி | 24.07.2020 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 3,00,000 | குடிநீர் விநியோகப்பணி அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது |
| 24 | இந்நகராட்சி பராமரிப்பின் கீழ் 12 குடிநீர் மேல்நிலைநீர்தேக்க தொட்டி மற்றும் நகருக்கு மேற்கே தலைமைபணியிடம் ஆகிய 13 இடங்களில் வெளியாட்கள் அத்துமீறி நுழையாமல் இருக்க இரும்பிலான எச்சரிக்கை அறிவிப்பு தட்டில் 13 எண்ணம் அமைக்கும் பணி | 18.09.2020 | திரு.பாலசுப்பிரமணியன் (பவர் ஏஜெண்ட்) | 1,02,000 | குடிநீர் விநியோகப்பணி பாதுகாப்பு அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது |
| 25 | இந்நகராட்சி அரசு மருத்துவமனை அருகில் உள்ள தேசிய நெடுஞ்சாலை பாப்பான் சாலை பாலம் விரிவாக்கப்பணிக்கு (கிழக்கு பகுதியில்) குடிநீர் பகிர்மான குழாய் புதியதாக அமைக்கும் பணி | 07.10.2020 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 4,50,000 | தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து இடைநிலை நீரந்து நிலையத்திற்கு வரும் குடிநீர் ஏற்றம் பாதிப்பு அடையாமல் இருக்க அவசரமாக மேற்கொள்ளப்பட்டது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 26 | இந்நகராட்சிக்கு சொந்தமான சாலையின் தெருக்களில் குறுக்கு பக்கவாட்டில் போக்குவரத்து காவல்துறை மற்றும் இந்நகராட்சி அனுமதியின்றி பொதுமக்கள் மற்றும் வாகனங்களின் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படுத்தும் வேகத்தடைகள் அகற்றுதல் பணி | 14.09.2020 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 48,000 | மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரைக்கிணங்க அவசரமாக மேற்கொள்ளப்பட்டது. |
| 27 | இந்நகராட்சி பேருந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு புதிய மும்முனை மின்இணைப்பு மற்றும் புதிய மோட்டார் வாங்கிய வகைக்கு | 04.11.2020 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 50,000 | பயணிகளின் நலன் கருதி அவசரமாக மேற்கொள்ளப்பட்டது. |
| 28 | இந்நகராட்சி வார்டு எண்.15, பரசுராமபுரம் தெற்கு தெரு மற்றும் வார்டு எண்.9, இல்லத்தார் தெற்கு தெருவினை இணைக்கும் பாப்பான் ஒடைய குறுக்கு பால சுவர் சிதிலமடைந்ததை சரிசெய்யும் பணி | 04.01.2021 | திரு.சாகுல்கமீது | 26,500 | பொதுமக்கள் நலன் மற்றும் போக்குவரத்து வசதிக்காக மேற்கொள்ளப்பட்டது |
| 29 | இந்நகராட்சி தமிழக முதலமைச்சரின் அம்மா மினிகிளினிக் திட்டத்தின் கீழ் மாவடிக்கால் மந்தை பகுதியில் உயர்மட்ட நீர்தேக்க தொட்டி, பழைய கட்டிடத்தில் அம்மா மினி கிளினிக் செயல்பட பராமரிப்பு மற்றும் கழிப்பறை வசதி மேற்கொண்ட பணி | 05.02.2021 | திரு.குத்தாலிங்கம் | 3,10,000 | மருத்துவம் மற்றும் சுகதார நலன் கருதி அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது. |
| 30 | இந்நகராட்சி வார்டு 01, குமந்தாபுரம் தமிழக முதலமைச்சரின் அம்மா மினிகிளினிக் | 05.02.2021 | திரு.வி.வெள்ளத் துரை | 80,000 | பொதுசுகாதார நலன் கருதி அவசரமாக மேற்கொள்ளப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | திட்டத்தின் கீழ் வார்டு எண்.01, குமந்தாபுரம் நூலகம் ஐசிடிஎஸ் கட்டிட அருகில் கழிப்பறை வசதி அமைக்கும் பணி | | | | |
| 31 | இந்நகராட்சி ODF சான்றிதழ் பெற இந்நகராட்சி பகுதிகளில் உள்ள சமுதாய மற்றும் பொது 13 கழிப்பிடங்களில் உள்ள குறைபாடுகள் மற்றும் தேவை மேற்கொள்ளும் பணி | 09.02.2021 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 5,90,000 | பொதுசுகாதார நலன் கருதி அவசரமாக மேற்கொள்ளப்பட்டது . |
| 32 | இந்நகராட்சி இடைநிலை நீரேற்றும் நிலையத்தில் மோட்டார் இயங்கும் ரூம் முழுவதும் மின்கசிவு காரணமாக சுவற்றில் Junction way சரி செய்யும் பணி | 18.03.2021 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 50,000 | மின் அபாயம் மற்றும் பணியாளர் நலன் கருதி அவசரமாக மேற்கொள்ளப்பட்டது |
| 33 | இந்நகராட்சி இடைநிலை நீரேற்றும் நிலையத்தில் புதியதாக பொருத்தப்பட்டுள்ள மோட்டார் மற்றும் பம்பிங் உள்ள Delivery pipe line ல் உள்ள Non return valve 150m ci valve லிருந்து பொருத்தும் தலைமை நீரேற்று நிலையத்தில் புதியதாக பொருத்தப்பட்டுள்ள 40 எச்.பி சப்மோட்டார்க்கு 35.00 ச.மீ காப்பர் கேபிள் கூடுதலாக 40 மீட்டர் அமைக்கவும் மற்றும் வாட்டர் லெவல் இன்டிகேட்டர் புதியதாக பொருத்தும் பணி. | 22.03.2021 | Alchem industries, 32A, Ooty Road, Mettuplayam, Coimbatore | 1,27,000 | குடிநீர் விநியோகப்பணி அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது |
| 34 | இந்நகராட்சி 2021 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் வாக்கு எண்ணிக்கை | 23.04.2021 | திரு.எம்.மாடசாமி | 9,94,000 | மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுரைக்கிணங்க உடனடியாக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 02.05.2021 அன்று நடைபெற உள்ளதால் வாக்கு எண்ணிக்கை இடமான யூஎஸ்பி கல்லூரி வளாகத்தில் தண்ணீர் வசதிகள் மற்றும் தற்காலிகமாக கழிப்பிட வசதிகள் (Mobile Toilet and Temporary Urinals) அமைக்கும் பணி | | | | நடமாடும் கழிப்பறை வாகனம் வாங்கி பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டது |
| 35 | இந்நகராட்சி வார்டு எண்.6, 7 வடக்குவிளைத் தெருவின் மத்திய பகுதி மற்றும் வடக்குவிளை வடக்கு தெருவின் கீழ் பகுதியில் சீராக குடிநீர் கிடைக்கப்பெற வில்லை. ஆகவே மேற்காணும் பகுதியில் சுமார் 310.00 மீட்டர் நீளத்திற்கு 6 தனி விநியோகம் புதியதாக அமைத்து வால்வும் பொருத்தும் பணி | 24.05.2021 | திரு.எஸ்.முருகையா | 3,70,000 | சீரான குடிநீர் விநியோக மேம்பாட்டு அவசரம் கருதி மேற்கொள்ளப்பட்டது |
| 36 | கடையநல்லூர் பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை முதல்நிலை சேகரிப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் Battery operated vehicle வாகனங்களில் உள்ள மின்கலன்கள் (Battery) மற்றும் மின்னூட்டல்கள் வாங்கி பொருத்தும் பணி 17 எண்ணம், BOV வாகனங்கள், 15 எண்ணம் சார்ஜர் | 01.06.2021 | Sharp systems Coimabtore | 7,47,000 | பொதுசுகாதார நலன் கருதி அவசரமாக மேற்கொள்ளப்பட்டது. |
| 37 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண். 07 வானுவர் பிள்ளையார் கோவில் தெரு மற்றும் வார்டு எண்.04 | 03.06.2021 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 42,500 | போக்குவரத்து நலன் மற்றும் பொதுசுகாதார நலன் கருதி அவசரமாக மேற்கொள்ளப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | சந்தனமாரியம்மன் கோவில் தெருவில் உள்ள சிறுபாலங்களை சரிசெய்யும் பணி | | | | |
| 38 | கடையநல்லூர் வார்டு எண்.15ல் பரசுராமபுரம் வடக்கு தெரு, கிழக்கு பகுதிக்கு குடிநீர் விநியோகம் சீராக கிடைத்திட பஜார் ரோடு, இஸ்லாம் மேல்நிலைப்பள்ளி வடபுறம் உள்ள தென்வடல் சந்து வழியாக 90 மீட்டர் நீளத்திற்கு பைப்லைன் மற்றும் வால்வு அமைத்து பரசுராமபுரம் வடக்கு தெருவுடன் இணைப்பு சரிசெய்யும் பணி | 10.06.2021 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 1,30,000 | சீரான குடிநீர் விநியோகம் அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது |
| 39 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.01 குமந்தாபுரம் வார்டு எண். 05 கிருஷ்ணாபுரம் பார்க் மற்றும் வார்டு எண். 09 முத்துகிருஷ்ணாபுரம் (செக்கடி) ஆகிய மேல்நிலைத்தொட்டிகளில் உள்ள குடிநீர் பகிர்மானக் குழாய்களில் உள்ள லால்வுகளை மாற்றி புதியதாக தரமான வால்வுகள் வாங்கி பொருத்தும் பணி | 11.06.2021 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 1,45,000 | சீரான குடிநீர் விநியோகம் அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது |
| 40 | கடையநல்லூர் நகராட்சி பகுதிகளில் முதல்நிலை சேகரிப்பு பணிகளுக்கு பயன்படுத்தப்படும் 17 எண்ணம் Battery Operated vehicle வாகனங்களில் பேட்டரி மற்றும் 15 எண்ணம் மின்னூட்டம் (சார்ஜர்) வாங்கி பொருத்தும் பணி | 23.07.2021 | Sharp systems Coimabtore | 7,47,000 | பொது சுகாதாரப்பணி அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது . |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 41 | கடையநல்லூர் நகராட்சி வார்டு எண். 32 ரகுமானியாபுரம் 8 மற்றும் 9வது தெருவிற்கு குடிநீர் விநியோகம் சீராக கிடைத்திட அத்தெருவின் வழியாக செல்லும் 4" குழாய் புதியதாக வால்வு அமைத்து இணைப்பு செய்யும் பணியினை மேற்கொள்ளுதல் | 29.07.2021 | திரு.கே.எஸ். அப்துல்மாலிக் | 1,15,000 | சீரான குடிநீர் விநியோகம் அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது |
| 42 | கடையநல்லூர் நகராட்சி புதிய பேரூந்துநிலையத்தில் கால அட்டவணை தனியாக நிரந்தரமாக புதுப்பித்து எழுதும் பணி | 16.08.2021 | திரு.அசன்முகம்மது | 80,000 | பேருந்து நிலையம் உரிமம் புதுப்பித்தலுக்காக நகர் ஊரமைப்புத் துறையினரின் அறிவுரைக்கிணங்க உடனடியாக மேற்கொள்ளப்பட்டது. |
| 43 | கடையநல்லூர் நகராட்சி புதிய பேரூந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பழுதடைந்துள்ளதை அவசர அவசியம் கருதி சரிசெய்யும்பணி | 19.08.2021 | Aqua Smart Water System Rajapalayam | 63,000 | பயணிகளின் நலன் கருதி அவசரமாக மேற்கொள்ளப்பட்டது. |
| 44 | கடையநல்லூர் நகராட்சி வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி பகுதிகளிலுள்ள பாப்பான்கால்வாய் ஓடை கழிவுகள் அப்புறப்படுத்தி சுத்தம் செய்யும் பணி | 18.09.2021 | திரு.அசன்முகம்மது | 9,40,000 | இயற்கை இடர்பாடுகள் பணி மேலாண்மை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகாக அவசரமாக மேற்கொள்ளப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 45 | கடையநல்லூர் நகராட்சி வடக்கு கிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இந்நகராட்சி பகுதிகளிலுள்ள மறுகால் ஓடை தண்டக்காரன் ஓடை கழிவுகள் அப்புறப்படுத்தும் பணி | 18.09.2021 | திரு.அசன்முகம்மது | 1,65,000 | இயற்கை இடர்பாடுகள் பணி மேலாண்மை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகாக அவசரமாக மேற்கொள்ளப்பட்டது. |
| 46 | கடையநல்லூர் நகராட்சி அலுவலக கணினி அறையில் பயன்பாட்டிலுள்ள கணினிகள் மற்றும் அதைச்சார்ந்த பொருட்களுக்கான மின்சாரம் வரும் மின்தடையில்லா காலங்களில் யூ.பி.எஸ் பழுதுநீக்கம் சரிசெய்யும் பணி | 23.09.2021 | திரு.அசன்முகம்மது | 1,20,000 | அலுவலகப்பணிகள் தடங்களின்றி நடைபெற அவசரமாக மேற்கொள்ளப்பட்டது. |
| 47 | கடையநல்லூர் நகராட்சி போகநல்லூர் உரக்கிடங்கில் உள்ள நாய் கருத்தடை செய்யும் இடத்தில் மின்வசதி செய்யும்பணி | 22.10.2021 | திரு.சாகுல்ஹமீது | 30,000 | பொது சுகாதாரப்பணி அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது. |
| 48 | கடையநல்லூர் நகராட்சி இடைநிலை நீரூற்று நிலையத்தில் உள்ள மோட்டார் அறை மேற்கூரை பழுதுநீக்கம் செய்யும்பணி | 07.11.2021 | திரு.வெள்ளத்துரை | 1,48,000 | குடிநீர் மற்றும் குடிநீர் விநியோகம் அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது. |
| 49 | கடையநல்லூர் நகராட்சி வார்டு 29 மதினா நகர், வார்டு எண். 2 மிட்டா ஆபிஸ் தெரு ஆகிய இடங்களில் இரும்பு மூடியுடன் கூடிய வால்வு தொட்டிகளில் அமைத்தல் பணி | 16.11.2021 | திரு.அசன்முகம்மது | 3,50,000 | குடிநீர் விநியோக பராமரிப்புப்பணி அவசரம் காரணமமாக மேற்கொள்ளப்பட்டது. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 50 | கடையநல்லூர் நகராட்சி பெரியாற்றுப்படுகையில் உள்ள தலைமை பணியிடத்தில் மோட்டார் அறைக்கு செல்ல புதியதாக இருப்பு பாலம் அமைக்கும் பணி | 25.11.2021 | திரு.வி.முத்தையா | 1,98,000 | குடிநீர் நீரேற்றுப்பணி அவசரம் காரணமாக மேற்கொள்ளப்பட்டது, |
| 51 | கடையநல்லூர் நகராட்சி TN76P5045, JCB வாகனத்திற்கு முன் மற்றும் பின்பக்க டயர்கள் வாங்கி பொருத்திய பணிக்கு | 26.11.2021 | ஜெயராஜ் மோட்டார் மொபைல் ஏஜென்ஸிஸ் திருநெல்வேலி | 81,396 | வாகன பயன்பாட்டு அவசரம் கருதி மேற்கொள்ளப்பட்டது |

மேற்காணும் பணிகள் யாவும், குடிநீர் விநியோக பராமரிப்பு மற்றும் சீரமைப்பு அவசியம் காரணமாகவும், பொது சுகாதார பணிகளை தடங்கலின்றி மேற்கொள்ள வேண்டிய அவசியம் காரணமாகவும், அலுவலக பணிகள் தொய்வின்றி நடைபெறும் பொருட்டும், தேர்தல் பணியின் அவசரம் கருதியும், கொரோனா தொற்று நோய்த்தடுப்பு பணிகளுக்காகவும், பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு பொதுமக்களிடமிருந்தும், உயர் அதிகாரிகள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சியினரின் அழுத்தம் மற்றும் நெருக்கடி காரணமாகவும் மேற்படி பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரி பணியினை நடைமுறைப்படுத்திட காலதாமதம் ஏற்படும் என்பதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ன் கீழ் நிர்வாக அலுவலரின் (ஆணையாளர்) அதிகார வரம்பிற்குட்பட்டு பணிகள் யாவும் மேற்கொள்ளப்பட்டுள்ளது என்ற விபரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் எவ்வித மதிப்பீடுகளும் மிகைப்படுத்தி தயார் செய்யப்படவில்லை எனவும், பணிகள் ஏதும் செய்யாமல் பட்டியல் தொகைகள் ஏதும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்படவில்லை எனவும் மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பிக்கப்படுகிறது'' என தெரிவித்துள்ளார்.

(3) மனுதாரரும், கடையநல்லூர் நகராட்சி ஆணையரும் 13.10.2022 அன்று தென்காசி முகாமில் நடைபெறும் விசாரணைக்கு ஆஜராகுமாறு 06.10.2022 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

(4) மனுதாரர் திரு.வே. கணபதி பாலசுப்பிரமணியன், 13.10.2022 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி பின்வருமாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"கடையநல்லூர் நகராட்சியில் ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டத்தின் கீழ் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படாமல், அவசர அவசியம் என்ற வகையில் டெண்டர் விடாமலேயே வேண்டியவர்களுக்கு பணிகளை ஒதுக்கி பணிகளை மேற்கொண்டுள்ளனர். இவை அனைத்தும் நகராட்சி அலுவலர்களின் ஒத்துழைப்புடன் நடந்து வருகிறது.

அதேபோன்று ஒப்பந்தப் பணிகளை சரிவர மேற்கொள்ளாமலும் அவற்றை மிகைப்படுத்தியும் மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. சில நேரங்களில் பணிகளே செய்யாமல்

பணிகளை செய்ததாகக் கூறி நகராட்சியினரின் உதவியுடன் தொகையை பெற்றும் முறைகேட்டில் ஈடுபட்டுள்ளனர். அங்கு நடைபெற்ற 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடைபெற்ற பாலப் பணிகளும் சரிவர செய்து முடிக்கப்படவில்லை.

எனவே, தலைமைச் செயலர் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அனுப்பியுள்ள சுற்றறிக்கையை கடைபிடித்தும், நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சிகளுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையினை கடைபிடித்தும் மேலும் கொள்முதல் செய்யப்படும்போது கடைபிடிக்கப்படவேண்டிய விதிமுறைகளை கடைபிடித்தும் ஒப்பந்தப்புள்ளிகளை கோரிட நகராட்சிக்கு ஆணையிடுமாறும், மேலும் கடையநல்லூர் நகராட்சியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோருவதில் ஏற்பட்டுள்ள முறைகேடுகளை விசாரணை செய்திடவும், முறைகேட்டில் ஈடுபட்டவர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுக்குமாறும் இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொள்கிறேன்'' என தெரிவித்துள்ளார்.

மேலும், வாக்குமூலம் அளிக்கும் போது, மனுதாரர் திரு.வே.கணபதிபாலசுப்பிரமணியன், கூடுதலாக சமர்ப்பித்த 13.10.2022 நாளிட்ட மனுவில் கடையநல்லூர் நகராட்சியால் ஒப்பந்தப்புள்ளி பெறப்படாமல், குடிநீர்குழாய் அமைத்தல், மின்மோட்டார்கள் மாற்றிஅமைத்தல், பொது கழிப்பிடங்களை சீரமைத்தல், நகர்மன்ற கூட்டரங்கு மற்றும் நகர்மன்றத் தலைவர் அறையின் வசதிகளை மேம்படுத்துதல் மற்றும் பாலம் தொடர்பான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என புகார் தெரிவித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

மனுதாரர் திரு.வே.கணபதிபாலசுப்பிரமணியன் தனது 13.10.2022 நாளிட்ட கூடுதல் புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

நான் மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவத்திடம் கடந்த 04.07.2022 அன்று கடையநல்லூர் நகராட்சியில் பணிகள் மற்றும் கொள்முதலுக்கு டெண்டரே விடாமல் தன்னிச்சையாக பணிகள் மேற்க்கொண்டு பல கோடி ரூபாய் மக்களின் வரிப்பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக புகார் கூறியிருந்தேன். இதுகுறித்து எனது விளக்கத்தை தங்களின் மேலான கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

தமிழக அரசு தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளிச்சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 (Tamilnadu Transparancy in Tender Act 1998 and Rules 2000) மூலம் அனைத்து அரசு துறைகளிலும் கொள்முதல், கட்டுமானம் மற்றும் இதர சேவைகளில் ஒளிவு மறைவற்ற வெளிப்படைத்தன்மையை ஏற்படுத்தும் வகையில் நடைமுறைப்படுத்தி வருகிறது. இந்த சட்டத்தின்படி அரசு துறைகளில் பணிகள் மேற்கொள்வதோ, கொள்முதல் செய்வதோ டெண்டர் மூலம்தான் மேற்கொள்ள வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளில் டெண்டர் கோரும்போது உரிய விதிகளை கடைபிடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்த வேண்டும் என கடந்த ஆண்டு உயர்நீதிமன்றம் தலைமை செயலாளருக்கு உத்தரவிட்டதை தொடர்ந்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமை செயலாளர் அவர்களும், நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களும் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 ஆகியவற்றை கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டுமென அனைத்து மாநகராட்சி மற்றும் நகராட்சி ஆணையர்களுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

ஆனால் கடையநல்லூர் நகராட்சி நிர்வாகம் இந்த சட்டம் மற்றும் விதிகளை கண்டு கொள்ளாமல் தன்னிச்சையாக செயல்பட்டு பணிகளை மேற்கொண்டு வருகிறது. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட ஒரு சில பணிகளை இத்துடன் குறிப்பிட்டுள்ளேன்.

நகராட்சியின் பல பகுதிகளில் டெண்டரே விடாமல் குடிநீர் குழாய் மற்றும் வால்வு அமைக்கும் பணி என்று பல லட்சம் ரூபாய் மோசடி, டெண்டரே விடாமல் சுமார் 16 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மின்மோட்டார் விநியோகம் செய்தது, பொது கழிப்பிடங்களில் உள்ள குறைபாடுகளை சரி செய்ததாக சுமார் ரூ 6 லட்சம் என பல்வேறு பணிகள் டெண்டரே விடாமல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அலுவலகத்தில் நகர்மன்ற கூட்ட அரங்கு மற்றும் நகர்மன்ற தலைவர் அறை சுமார் ரூ 26 இலட்ச மதிப்பீட்டில் டெண்டர் இல்லாமல் மேற்கொள்ளப்பட்டுள்ளது இதற்கெல்லாம் சிகரம் வைத்தார் போல தற்போது 35 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நகராட்சிப்பகுதி சேந்தமரம் சாலையில் இருந்து சீவலங்கால் வரையில் நடைபெற்றுவரும் கழிவுநீர் ஒடை மற்றும் பால பணிகளுக்கும் டெண்டர் நடைபெறவில்லை, தாங்கள் முழுமையான விசாரணைக்கு உத்தரவிட்டால் பல்வேறு முறைகேடுகள் வெளிச்சத்திற்கு வரும்.

எனவே, இது குறித்து உரிய விசாரணைக்கு உத்தரவிட்டு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

(5) எதிர்மனுதாரரான கடையநல்லூர் நகராட்சி ஆணையாளராக பணிபுரியும் திரு.S.ரவிச்சந்திரன் மற்றும் நகராட்சிப் பொறியாளராகப் பணிபுரியும் திருமதி.கே.லதா, ஆகிய இருவரும் அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளனர்:

“கடையநல்லூர் நகராட்சியில் 2017–18ம் நிதியாண்டில் 7 பணிகளும், 2018–19 மற்றும் 2019–20ல் தலா 3 பணிகளும் 2020–21 மற்றும் 2021–22 ஆகிய நிதியாண்டில் முறையே 20 மற்றும் 18 பணிகள் செய்து முடிக்கப்பட்டது. மேற்கண்ட பணிகள் குடிநீர் விநியோகப் பராமரிப்பு மற்றும் சீரமைப்பு அவசியத்தைக் கருதியும், பொது சுகாதாரப் பணிகள் தடங்கடலின்றி மேற்கொள்ளவும் மேலும் கோவிட் காலத்தில் நோய்தடுப்புப் பணிகளை மேற்கொள்ளவும் வேண்டி ஒப்பந்தப்புள்ளி பெற கால தாமதம் ஏற்படும் என்பதால் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15ன்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டது என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் ஆணையரான எனது 13.10.2022 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களை எங்களது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி தெரிவித்து, மேற்கண்ட பணிகள் குறித்த விவரங்களையும் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம்” என தெரிவித்துள்ளார்கள்.

மனுதாரர் திரு.வே.கணபதிபாலசுப்பிரமணியன் அளித்த 13.10.2022 நாளிட்ட கூடுதல் புகார் மனுவிற்கு கடையநல்லூர் நகராட்சி ஆணையர் தனது 11.11.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

கடையநல்லூர் நகராட்சியில் தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 ஆகியவற்றை கடைபிடித்து அனைத்து பணிகளும் நடைபெற்று வருகிறது. மேலும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 பிரிவு 15–ல் அவசர, அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும், பொதுமக்கள் நலனுக்காக மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளை செய்வதற்கு ஆணையாளருக்கு தனி அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் நேரடியாக விலைப்புள்ளிகள் பெற்று விதிமுறைகளை பின்பற்றி கீழ்கண்ட பணிகள் சிறப்பினம் கருதி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கடையநல்லூர் நகராட்சிப் பகுதியில் கோடைகாலத்தில் (ஏப்ரல், மே மாதங்களில்) நீர்வரத்து குறைவானதால் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் சீராக விநியோகிப்பதற்கு 2019–2020 ஆம் ஆண்டு வறட்சி நிவாரண பணியாக கடையநல்லூர் நகராட்சியின் பிரதான

நீராதாரங்களான கல்லாற்றுப் படுகையில் அமைந்துள்ள திறந்தவெளி கிணறுகளுக்கு 3 எண்ணிக்கை மின் மோட்டார்களும், பெரிய நாயகம் கோவில் அருகில் உள்ள திறந்தவெளி கிணறுகளுக்கு 6 எண்ணிக்கை மின் மோட்டார்களும் மற்றும் இரண்டாற்று முக்கு பகுதிகளில் அமைந்துள்ள திறந்தவெளி கிணறுகளுக்கு 4 எண்ணிக்கைகள் மின் மோட்டார்களும் ஏற்கனவே அங்கு நிறுவப்பட்ட குறைந்த குதிரைத்திறன் கொண்ட மின் மோட்டார்களை உயர்திறன் கொண்ட மின் மோட்டார்களாக மாற்றியமைத்து நீர் உறிஞ்சும் திறனை அதிகப்படுத்தி பொதுமக்களின் கோடைக்கால குடிநீர் பற்றாக்குறையினை சரி செய்யும் நோக்கில் உரிய விலைப்புள்ளிகள் பெற்று மொத்தம் 13 எண்ணிக்கையிலான மின் மோட்டார்கள் ஸ்ட்டார்டர்களுடன் வாங்கி வெவ்வேறு இடங்களில் பொருத்தி சீரான குடிநீர் விநியோகம் செய்து கோடை கால வறட்சி சமாளிக்கப்பட்டது.

மத்திய, மாநில அரசின் உத்தரவின்படியும், பொதுசுகாதார நலன் கருதியும் கடையநல்லூர் நகராட்சி பகுதியினை திறந்தவெளி கழிப்பிடமில்லாத (ODF +) நகராட்சியாக மாற்றும் பொருட்டும், அவசர, அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் 1 முதல் 33 வார்டுகளிலும் அமைந்துள்ள சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொதுக்கழிப்பிடங்களில் உள்ள அனைத்து குறைபாடுகளை சரிசெய்யும் பணியினை உரிய விலைப்புள்ளிகள் பெற்று ரூ.5,90,000/– மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் – 2022 நன்னடத்தை விதிகள் அமலில் இருக்கும் போது ஒப்பந்தப்புள்ளி கோர முடியாத காரணங்களாலும், கடையநல்லூர் நகராட்சியில் அமைந்துள்ள நகர்மன்ற கூட்டரங்கு 15 ஆண்டுகளுக்கு முன்னர் பரமரிக்கப்பட்டு பயன்பாடற்று பாழடைந்த நிலையில் இருந்தமையாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் –2022 முடிவுற்று நகர்மன்ற உறுப்பினர்கள் 02.03.2022 அன்று பதவியேற்பதை கருத்தில் கொண்டு நகர்மன்ற கூட்டரங்கினை புதிய பொலிவுடன் சீரமைக்கும் பொருட்டு மேஜை நாற்காலிகள் போன்ற தளவாடச் சாமான்களை சரி செய்யும் பணியினை மேற்கொள்ள ரூ.9,60,000/– மதிப்பீட்டில் உரிய விலைப்புள்ளிகள் பெற்று 23.02.2022 அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

அதனை தொடர்ந்து 04.03.2022 அன்று நகர்மன்ற தலைவர் அவர்கள் பதவியேற்பதை முன்னிட்டு பழுதடைந்த நிலையிலிருந்த நகர்மன்ற தலைவர் அறையினை உடனடியாக புதுப்பித்து தர நகர்மன்ற தலைவர் அவர்கள் அறிவுறுத்தியதால் நகர்மன்ற தலைவர் அறையினை ரூ.9,80,000/– மதிப்பீட்டில் உரிய விலைப்புள்ளி கோரி பணி மேற்கொள்ளப்பட்டது.

மேலும் நகர்மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு முதல் கூட்டம் கூட்டப்படுவதற்கு முன்னதாக நகர்மன்ற கூட்டரங்கில் குளிர்சாதன வசதி, மின்இணைப்பு வசதிகள் மற்றும் ஒலி பெருக்கி சாதனங்கள் அமைக்கும் பணியினை நவீன முறையில் செய்துதர நகர்மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள் வற்புறுத்தியமையால் ரூ6,20,000/– மதிப்பீட்டில் உரிய விலைப்புள்ளி அறிவிப்புகள் வழங்கி 05.03.2022 அன்று வேலை உத்தரவு வழங்கி பணி மேற்கொள்ளப்பட்டது.

தற்போது கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.25, சேர்ந்த மரம் கிராமத்திற்கு செல்லும் பஜார் சாலையில் மசூது தைக்கா பள்ளி நுழைவு வாயில் அருகில் மற்றும் நகராட்சி பூங்கா கீழ்புறம் சிறு பாலங்கள் அமைத்து 50 ஆண்டுகளுக்கு மேலான நிலையில் மேற்படி பாலங்கள் சாலை மட்டத்திலிருந்து சுமார் இரண்டு அடி ஆழத்திற்கு கீழிறங்கி முற்றிலும் சிதிலமடைந்தும், தூர்ந்து போய் அடைபட்டும் இருந்ததால், வார்டு எண்கள். 17,23,25 ஆகிய வார்டு பகுதிகளிலிருந்து வெளியேறும் மழைநீர் தேக்கமடைந்து அருகாமையில் உள்ள பள்ளி

வளாகத்திற்குள்ளும், அருகிலுள்ள குடியிருப்புகளில் உட்புகுந்தும் சுகாதாரக்கேடு விளைவிக்கும் வகையில் இருந்ததாலும், நிர்வாகத்தின் மீதும், அரசின் மீதும் பொதுமக்களிடம் கடும் அதிருப்தி ஏற்படும் நிலை வந்ததாலும், அது குறித்து உள்ளூர் மீடியாக்களில் செய்திகள் வெளிவந்த காரணத்தினாலும், போர்க்கால அடிப்படையில் மேற்படி பாலம் மற்றும் வடிகாலினை புதுப்பித்து கட்ட நகர்மன்ற தலைவர் அவர்கள் நேரடி அறிவுரை வழங்கியுள்ள நிலையிலும், பள்ளி நிர்வாகம் மற்றும் அப்பகுதி மக்களிடமிருந்து நேர்முகமாக வரப்பெற்ற கோரிக்கையினை ஏற்று சிறு பாலங்கள் மற்றும் வடிகால் அமைக்க ரூ.8,50,000/– மதிப்பீட்டில் உரிய விலைப்புள்ளிகள் பெற்று புதுப்பித்து கட்டப்பட்டு மழைநீர் தேங்குவது சரி செய்யப்பட்டுள்ளது.

மேலும் பொதுமக்கள் நலன், நகர்மன்ற தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கைகளுக்கு ஏற்ப அவசர அவசியம் கருதி ஒப்பந்தப்புள்ளி கோரி பணி மேற்கொள்ள ஏற்படும் கால இழப்பினை கருத்தில் கொண்டு ஒரு சில அத்தியாவசிய / அவசர பணிகளுக்கு மட்டும் உரிய விலைப்புள்ளிகள் பெற்று குறைந்தபட்ச விலைப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால், உள் நோக்கத்துடன் ஒரே நபரிடமிருந்து தொடர்ந்து வரும் புகார் மனுவினாலும் அலுவலக பணிகள் பாதிப்படைவதால் இம்மனுவினை தள்ளுபடி செய்திட மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திடம் பணிவுடன் வேண்டப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

(6) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், கடையநல்லூர் நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை, வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

தென்காசி மாவட்டம், கடையநல்லூரைச் சேர்ந்த மனுதாரர் திரு.வே.கணபதி பாலசுப்பிரமணியன் என்பவர் தனது முறையீட்டு மனுவில் கடையநல்லூர் நகராட்சியில் 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டுகள் வரை மேற்கொள்ளப்பட்ட 51 பணிகளுக்கு, ஒப்பந்தப்புள்ளி முறை பின்பற்றப்படாமல் முறைகேடாக ஒப்பந்ததாரர்கள் மூலம் அதிக மதிப்பீட்டில் தரமற்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன என புகாராக தெரிவித்து, உரிய அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியுள்ளார்.

கடையநல்லூர் நகராட்சி முதல்நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 15–ன்படி, நெருக்கடிகால நேர்வுகளில் பொதுமக்களின் உடல் நலத்திற்கும் மற்றும் பாதுகாப்பிற்கும் தேவையாக கருதுகின்ற பணிகள் எவற்றையும் நகராட்சியின் நகர்மன்ற இசைவளிப்பு இல்லாமல் மேற்கொண்டு நிறைவேற்றுவதற்கு நகராட்சியின் ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அரசாணை (டி) எண் 334 ந.நி (ம) கு.வ.துறை நாள் 03.08.2016–ல் அரசானது, பிறவற்றுள், முதல்நிலை நகராட்சியின் ஆணையாளர்களால் கட்டுமானப் பணிகளுக்கு ரூ 40 இலட்சம் வரை செலவினம் மேற்கொள்ள நிர்ணயம் செய்து நிர்வாக அனுமதி ஆணையினை வெளியிட்டது.

மனுதாரர் புகாராக தெரிவிக்கும் 2018 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டுகள் வரை ஒப்பந்தப்புள்ளி பெறப்படாமல் மேற்கொள்ளப்பட்ட 51 பணிகளை, கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 15–ன் கீழ் தனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி அவசரப் பணிகளை மேற்கொள்ளும் வகையில், 2018 ஆம் ஆண்டு முதல் 2021 வரையிலான பின்வரும் பணிகள் ஒப்பந்தப்புள்ளி பெறப்படாமல் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது ஆவணங்களின் மூலம் அறியமுடிகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1) | நகராட்சிக்குட்பட்ட சாலைகளில் உள்ள குடிநீர் குழாய்களில் ஏற்பட்ட கசிவுகளை சரி செய்தல், வால்வு அமைத்தல் மற்றும் புதிய குழாய் பொருத்துதல் | – | 22 பணிகள் |
| 2) | 2019–20 ஆம் ஆண்டில் கொரோனா நோய் பரவலை தடுக்கும் பணிகளுக்கு, நோய் தடுப்புச் சாதனங்கள் கொள்முதல் செய்தது மற்றும் அதன் தொடர்பான பணிகள் மேற்கொண்டது | – | 08 பணிகள் |
| 3) | பொது சுகாதாரத்தை பேணும் வகையில் பொது கழிவறைகள் மற்றும் குளியலறைகள் பழுதுபார்ப்பு மற்றும் கழிப்பறைகள் அமைக்கும் பணிகள் | – | 07 பணிகள் |
| 4) | போக்குவரத்தினை சீரமைக்கும் வகையில் சாலை பராமரிப்பு | – | 05 பணிகள் |
| 5) | நகராட்சியின் அலுவலகப்பணிகள் மேற்கொண்டது | – | 04 பணிகள் |
| 6) | நாடாளுமன்ற தேர்தல் பணிகள் தொடர்பாக | – | 03 பணிகள் |
| 7) | மின்கசிவு சரிசெய்தல் தொடர்பாக | – | 02 பணிகள் |
| | மொத்தம் | – | 51 பணிகள் |

மேற்காணும் 51 பணிகளை ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு மேற்கொள்வதன் மூலம் காலதாமதம் ஏற்படும் என்கிற கருத்தினை அடிப்படையாகக் கொண்டு, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 15–ல் வரையறுக்கப்பட்டுள்ளபடி, அப்போதைய நகராட்சி ஆணையாளர்கள் பணிகளை மேற்கொண்டதன் மூலம், நகராட்சிக்குட்பட்ட குடிவாழ் மக்களின் வாழ்க்கைக்கு அத்தியாவசிய தேவையான குடிநீர் தங்கு தடையின்றி பெற்றிடவும், கொரோனா நோய் பாதிப்பிலிருந்து பாதுகாத்திடவும், பொது கழிப்பறைகள் மற்றும் குளியலறைகளை அமைத்தும் மற்றும் பழுதுநீக்கியதன் மூலம் பொது சுகாதாரம் பேணப்படவும், சாலைகளில் ஏற்பட்ட பழுதுகளை சீர் செய்ததன் மூலம் சீரான போக்குவரத்து கிடைத்திடும் வகையிலும் நகராட்சி ஆணையாளர்களால் ஒப்பந்தப்புள்ளி பெறப்படாமல் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது ஆவணங்களின் மூலம் தெரியவருகிறது.

மேற்காணும் 51 பணிகள்யாவும் பொதுமக்களின் அத்தியாவசிய மற்றும் அவசர தேவையாக இருப்பது ஆணையரின் அறிக்கை மூலம் தெளிவாகிறது.

இருப்பினும், நகராட்சி நிர்வாக ஆணையாளரின் சுற்றறிக்கை எண். Roc No.61608/99/L3 நாள்.25.10.1999–ல் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையில் நகராட்சி ஆணையாளர்களால் அவசரமில்லாத பணிகளான கால்வாய்கள், பாலங்கள் கழிவறைகள் போன்றவற்றை கட்டும் பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோருவதை தவிர்க்கும் பொருட்டு, 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 15–ஐ தவறாக பயன்படுத்தி பணிகளை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் இதனை தடுத்திடும் பொருட்டு, கீழ்க்காணும் பணிகளை மட்டும் அவசரகால பணிகளாக கருதி பிரிவு 15–ன்கீழ் நகராட்சி ஆணையாளர்கள் மேற்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

1) இயற்கை சீற்றங்களால் ஏற்படும் சேதங்கள் காரணமாக உடனடியாக மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புப் பணிகள்.

2) குடிநீர் விநியோகம், சாலைகள், தெருவிளக்குகள், பாதாள சாக்கடைகள் உள்ளிட்ட வடிகால்கள் போன்ற அத்தியாவசிய சேவைகளை மீட்டெடுக்கும் பணிகள்.

3) நகர்மன்றத்தின் அடுத்த கூட்டம் கூட்டி சாதாரண அனுமதி கிடைக்கும் வரை காத்திருக்க முடியாத பணிகள்.

மேற்காணும் நகராட்சி நிர்வாக ஆணையாளரின் வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டு நடைமுறையில் இருக்கும் சமயத்தில், கடையநல்லூர் நகராட்சி ஆணையர், 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம், பிரிவு 15–ன் கீழ் நகர்மன்ற இசைவளிப்பின்றி கீழ்காணும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதை ஆணையரின் அறிக்கை வாயிலாக அறிய வருகிறது.

- நகராட்சிக்குட்பட்ட சமுதாய கழிப்பிடங்கள் மற்றும் பொதுக் கழிப்பிடங்களை ரூ.5,90,000/– செலவில் குறைபாடுகள் சரிசெய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.
- ரூ 9,60,000/– செலவில் கடையநல்லூர் நகர்மன்ற கூட்டரங்கு சீரமைக்கப்பட்டுள்ளது.
- கடையநல்லூர் நகராட்சியிலுள்ள நகர்மன்ற தலைவர் அறையினை ரூ 9,80,000 செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளது.
- ரூ 6,20,000/– செலவில் நகர்மன்ற கூட்டரங்கில் குளிர்சாதனவசதி, மின்இணைப்பு வசதிகள் மற்றும் ஒலிபெருக்கி சாதனங்கள் அமைக்கப்பட்டுள்ளது.
- சிறுபாலங்கள் மற்றும் வடிகாலினை ரூ 8,50,000/– செலவில் கட்டப்பட்டுள்ளது.

நகராட்சி நிர்வாக ஆணையாளரின் 25.10.1999 நாளிட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களுக்கு எதிராக கடையநல்லூர் நகராட்சி ஆணையாளரால் மேற்காணும் 5 பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ள கட்டுமானப் பணிகளாகும். இப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கு பதிலாக, தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 15ஐ தவறாக பயன்படுத்தி, சட்டத்திற்கு புறம்பாக விதிகளை மீறி, பொறுப்பற்ற முறையில் தன்னிச்சையாக கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் செயல்பட்டுள்ளார். இவ்வாறு கடமைதவறியும், மெத்தனமாகவும் மற்றும் அலட்சியமாகவும் செயல்பட்ட கடையநல்லூர் நகராட்சி ஆணையாளர் மீது உரிய விதிகளின்கீழ் துறைரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு, நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு இம்முறைமன்ற நடுவம் பரிந்துரை செய்ய முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

It is shocking that the Municipal Commissioner of Kadayanallur Municipality has taken recourse to Section No. 15 of the Tamil Nadu District Municipalities Act to undertake the works that have not been permitted in the CMA's circular dated 25.10.1999 and committed excess on adherence to rules and regulations of Tender procedure and the well–laid principles of administration emanating from the Head of the Department. The DMA office circular dated 16.12.2022 reiterates the earlier instructions issued in the year 1999. Hence, the Municipal Commissioner and the officials concerned with this serious breach, violation and indiscipline should be dealt with deterrently by severe disciplinary action by the DMA. The RDMA of the region, during the period, has also defaulted in his supervisory role by sheer failure to curb

such unethical and unscrupulous practices by the Kadayanallur Municipality. The RDMA should be also taken to task for his / her lapse in this financial squandering and deliberate deviation from observing rules of tender procedure.

If this kind of abuse of powers is tolerated, it would only lead to collapse of meaningful administration by simply flouting rules and circumventing by resorting to Section No. 15 exposing favoritism, misuse and wilful dereliction of duties in accordance with Law.

2022 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு.வே. கணபதி பாலசுப்பிரமணியன்,
3/9, பவுண்டுத் கீழத்தெரு, மேலக்கடையநல்லூர்,
கடையநல்லூர் – 627 751, தென்காசி மாவட்டம்.

2) ஆணையாளர், கடையநல்லூர் நகராட்சி,
கடையநல்லூர் – 627 751, தென்காசி மாவட்டம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நெ.75, சாந்தோம் மெயின் ரோடு,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

28/12/22

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்

28/12/22